DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC – 66/2020

Prosecution witness – PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வன்.சிரிநாத் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| **Taluk** | **:** | **Age:** | |

(Accused absent. Petiton u/s.317 Cr.P.C filed and allowed.)
08.07.2025– 12.00 PM

சாட்சி இளவர் என்பதால் சாட்சியின் சாட்சியம் அளிக்கும் மதிப்பீடு செய்யும் போது கீழ்கண்ட கேள்விகளை நீதிமன்ற கேள்விகளாக கேட்கப்படுகிறது.

கேள்வி 1: உனது பெயர் என்ன ?
பதில்: எனது பெயர் சிரிநாத்.

கேள்வி 2 என்ன படித்து வருகிறீர்கள்?
பதில் நான் சாயல்குடியில் உள்ள பள்ளியில் 9 ம் வகுப்பு படித்து வருகிறேன்.

கேள்வி 3; வழக்கின் புகார்தாரரை தெரியுமா ?
பதில் ; எனது அம்மா முத்துலட்சுமிதான் இந்த வழக்கின் புகார்தாரர்.

கேள்வி 4; இவ்வழக்கின் எதிரி யார் என்று தெரியுமா?
பதில் ; தெரியும் எனது அப்பா வில்வதுரை.

கேள்வி 5; இந்த இடம் எந்த இடம் என்று தெரியுமா?
பதில்; தெரியும், கடலாடி நீதிமன்றம்.

கேள்வி 6; நீ எதற்காக இங்கு வந்துள்ளாய் என்று தெரியுமா?
பதில் : சாட்சியம் அளிப்பதற்காக வந்துள்ளேன்.

சாட்சிக்கு சாட்சியம் அளிக்க போதுமான தகுதி இருப்பதாக கருதி சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது ஓச்சதேவன் கோட்டை கிராமத்தில் எனது அம்மாவுடன் வசித்து வருகிறேன். எதிரி எனது அப்பா. அ.சா.1 எனது அம்மா. சம்பவ தேதி 05.03.2020 இரவு சுமார் 10.30 மணியளவில் நானும், எனது அம்மா முத்துலட்சுமி மற்றும் எனது ஆத்தா மாரியம்மாள் ஆகியோர் புனவாசல் கிராமத்தில் உள்ள எனது ஆத்தாவீட்டில் இருந்தோம்.

2. அப்போது எனது அப்பா மது அருந்திவிட்டு வந்து எனது பாட்டியை தகாத வார்த்தைகளால் பேசினார். தேவிடியா முண்டை என்றும் ஆபாச வார்த்தைகளால் பேசினார். சம்பவத்திற்கு முன்பு ஒரு வருடத்திற்கு மேல் எனது அப்பாவிற்கும் எனது அம்மாவிற்கும் சண்டை ஏற்பட்டு பிரிந்து எனது பாட்டியின் வீட்டில் வசித்து வந்தோம். எனது அப்பா அடிக்கடி மது அருந்திவிட்டு வந்து எனது அம்மாவிடமும், பாட்டியிடமும் பிரச்சனை செய்து வந்தார்.

3. சம்பவத்தன்று எனது அப்பா அருவாளுடன் வந்து எனது பாட்டியை வெட்டுவதற்காக ஓங்கியபோது எனது அம்மா தடுத்ததில் எனது அம்மாவிற்கு இடது விரல் கட்டை விரலிலும், வலது முழங்கையிலும், இடது பக்க மார்பிலும் வெட்டு விழுந்தது. மார்பில் வெட்டிய இடத்தில் பிளந்துவிட்டது. இரத்தம் வழிந்தது. எனது அம்மாவை வீட்டை விட்டு வெளியில் இழுத்து போட்டார். நான் சம்பவத்தை பார்த்து அலறினேன். பக்கத்தில் வசிப்பவர்கள் ஓடி வந்தவுடன் எனது அப்பா ஓடிவிட்டார். காயம்பட்ட எனது அம்மாவை கடலாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள்.

4. நான் எனது அத்தை வீட்டில் தங்கிவிட்டேன். சுமார் 20 நாட்கள் எனது அம்மா சிகிச்சை பெற்றார். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

எனது சொந்த ஊர் வேப்பங்குளம். எனக்கு ஒரு தங்கை மற்றும் ஒரு அண்ணன் உள்ளார்கள். தம்பி இல்லை. சம்பவ நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். எனது ஆத்தா வீட்டின் அருகில் ஒரு தாத்தா வீடு உள்ளது. அவரது பெயர் எனக்கு நினைவில் இல்லை. எனது ஆத்தா வீட்டின் அருகில் சுமார் 5,6 வீடுகள் உள்ளது. அங்கு மின்சாரம் எப்போதும் இருக்காது. சம்பவம் நடந்த சமயம் நான் எந்த பள்ளிக்கூடத்தில் படித்தேன் என்றால் புனவாசலில் உள்ள் பள்ளிகூடத்தில் படித்தேன். எனது ஆத்தாவிட்டில் தங்கிதான் பள்ளிக்கூடத்திற்கு சென்று வந்தேன். வேப்பங்குளமும் புனவாசலும் அருகருகே உள்ள ஊர்கள் என்றால் சரிதான்.

நான் வேப்பங்குளத்திலிருந்து எதற்காக பள்ளிக்கூடத்திற்கு செல்லவில்லை என்றால் எனது அப்பாவும், அம்மாவும் அடிக்கடி சண்டை போடுவார்கள் அதனால்தான் பள்ளிகூடத்திற்கு செல்லவில்லை. நான் சம்பவ சமயம் மூன்றாம் வகுப்பு

படித்துகொண்டிருந்தேன். சம்பவ சமயத்திற்கு முன்பு எனது அப்பா வெளிநாட்டில் எத்தனை வருடங்கள் இருந்தார் என்றால் சுமார் 5 ஆண்டுகள். எனது அப்பா சம்பாதித்த பணத்தை எனது அம்மாவிற்குதான் அனுப்புவார். அந்த பணத்தை எனது அம்மா என்ன செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

வெளிநாட்டில் இருந்து எனது அப்பா வந்தபின்னர் எனது அம்மாவிடம் பணத்தை எவ்வாறு செலவு செய்தாய் என்று கேட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பாவிற்கு அம்மா , அப்பா இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும். எனது அப்பா தனியாகத்தான் வாழ்ந்துவருகிறார் என்றால் சரிதான். சம்பவத்தை யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் நான் நேரடியாக பார்த்தேன். சம்பவம் வீட்டிற்கு உள்ளே நடைபெற்றதா அல்லது வெளியில் நடைபெற்றதா என்றால் வீட்டின் முகப்பில் உள்ள தகர கொட்டகை அருகில் நடைபெற்றது. சம்பவ சமயத்தில் நான் எங்கே படுத்து இருந்தேன் என்றால் நான், எனது அம்மா, எனது அண்ணன் , எனது தங்கை உள்ளே உள்ள அறையில் படுத்து இருந்தோம். எனது ஆத்தா வெளியில் இருந்தார்.

எனது அப்பா முதலில் எனது ஆத்தாவை அடித்தாரா அல்லது எனது அம்மாவை அடித்தாரா என்றால் எனது ஆத்தாவை அடிக்க போகும் போது எனது அம்மா தடுத்ததால் எனது அம்மாவை வெட்டிவிட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். எங்கே வைத்து விசாரித்தார்கள் என்றால் ஊருக்குள் வந்து எனது அத்தை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனது ஆத்தாவின் தூண்டுதலின் பேரில் பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி